செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஅ] யாழ்ப்பாணம்: நள ஸு ஆடி மீ உகூ-ஷ வெள்ளிக்கிழமை (13-8-1976) [இல: கூகூ

நாடும் — நகரும் — காடும்

# திருமுறை நாதம் ஒலித்தது

## கேதீச்சரம் நோக்கிப் பாதயாத்திரைப் பத்தர்கள் கோஷம்

நல்லூர்க் கந்தன் கருணைப் பேரூரிலிருந்து புதன்கிழமை மாலை பூசை கண்டு புறப்பட்ட நூற்றுக்கணக்கான அடியார்கள் புண்ணிய சீலர்கள் எழுபத்தைந்துகல் தொலைவில் இருக்கும் க்ஷேத்திரத்துக்கு மனம் வாக்குக் காயத்தால் அருச்சனை செய்யும் தவப் பேறுடையவர்கள்.

ஆண்டுதோறும் ஆடிவேல் விழா நாட்களில் நாடும் நகரமும், காடும் ஆடிப் பாடித் திருமுறை ஓதும் அருட் செல்வர்கள். இவர்களைக் காண்பதும் நன்று; கூடிக் குலாவிச் செல்வதுவும் மிக நன்று.

பழனமும், கழனியும், யாறும், குளமும் அருள்மிகு திருக்கோயில்களும் நிறைந்த பழைய பண்பாட்டுத் தமிழகம் இன்று காடும் மேடும் கற்பூமியுமாக மாறியிருப்பதை மறுபடியும் புராதனப் பொலிவுபெற இருபது வருடமாக இந்த நோன்பு — இந்த யாகம் நிகழ்கின்றது.

வயோதிபர், வாலிபர், ஆண்கள், பெண்கள் சிறுவர்கள், சிறுமியர் என்று பல திறப்பட்ட பக்தர் கூட்டம். சங்கொலியும கைத் தாள ஒலியும் நெஞ்சாரப் பொலிந்த பண்ணிசை ஒலியுமாக வருவதை வரவேற்ற புண்ணியக் கிராமங்கள் பலப் பல. புண்ணியவான்கள் பலர் அன்னம் பாலித்தார்கள்; பேருவகையுடன் அன்புரையாடினார்கள்; தாமும் பாதயாத்திரையோடு கூடிச் சென்றார்கள்,

ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கேதீச்சரத் திருப்பதியின் இராஜ கோபுரம் தொலைவிற் கண்டதும் "சிவ - சிவ" எனும் பரவச கோஷம் வானைப் பிளந்தது; உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

---

### மீசாலை மேவும் விநாயகராலய மேன்மை

[ சைவப் புலவர் கு. வே. மகாலிங்கம் ]

படைத்தல் காத்தல் அளித்தல் என இறைவனின் தொழில் மூன்று. இந்த மூன்று என்ற இலக்கம் தமிழோடும் தமிழகத்தோடும் என்றே நீக்கமற இணைந்து கொண்டிருக்கிறது. இயல், இசை, நாடகம் என்ற மூன்று இணைந்தமையால் முத்தமிழாகிச் சிறப்புற்றது தமிழகத்தை ஆட்சிசெய்தவர் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவர்.

மா, வாழை, பலா ஆகிய இந்த முக்கனிகளின் பெருமையை சங்க இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய தாலாட்டுப்பாடல்கள் கூடச் சலாகித்துப் பேசுகின்றது. இந்த முக்கனிகளில் ஒன்றான மாக்கனியின் சுவையை அருஞ்சுவையால் திருவருள் செய்யும் மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார்.

இங்கு கொடியேற்றத் தேர் விழா சென்ற ஞாயிற்

வளர்ச்சி 3-ம் பக்கம்

---

### சைவ அநாதை இல்லத்துக்கு சால்புத் தொண்டு நிகழ்ச்சிகள்

#### தொடக்க வைபவம் தொண்டர் நாடொறும் தொழும் திருக்கேதீச்சரத்தில்

இலங்கைச் சைவ அநாதை இல்லம் (கைதடி) எடுக்கின்ற எழுச்சி மாநாடு இருபிரிவுகளாக விரியும். தொடக்க விழா திருக்கேதீச்சரத் திருவாசக மடத்தில் 20-8-76 வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு சிவநெறிப் புரவலர் க. கனகராசா அவர்கள் தலைமையில் நிகழவிருக்கின்றது.

ஈழத்துச் சிவனடியா திருக்கூட்டத்தலைவர் திரு சி. சரவணமுத்துச்சாமியார் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இலங்கை இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தம் ஆகியோர் சொற்பெருக்குவர்.

திருக்கேதீச்சரத்திலிருந்து அன்று காலை 6 மணிக்குத் தேசபவனி ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு கைதடியை யடையும இந்நிகழ்ச்சி யாழ்ப்பாணம் நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறும்

21-8-76 தொடக்கம் யாழ். குடாநாடெங்கும் பவனி தொடரும்.

இரண்டாம் அங்கம் 27-8-76 வெள்ளிக்கிழமை கைதடியில் நிகழவிருக்கின்றது 29-8-76 வரைக்கும் நிகழ்ச்சிகள் உள.

---

### இறை சத்தி எழுச்சியுடைய இராஜ இராஜேஸ்வரி அம்பாள்

#### சைவாசாரத்தை வளர்க்கும் தாயில்லம்

"அருளது சத்தியாகும்" என்னும் சித்தியார் திலவாக்கிற்கேற்ப இந்த உருகெங்கும் சத்தியாகிய தேவியின் அருளே நிறைந்து பொலிந்து விளங்குகின்றது. உற்சவ காலங்களிலே இத்தெய்வத் திருவருளானது ஆலபதிதின் மூலவிக்கிரகம், சிவாசாரியர், கும்பம், தர்பம் எங்கணும் வியாபித்து நிற்கும். அக்காலத்தில் அன்னையை வணங்குவது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்".

நாயன்மார்கட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் சைவ நன்மக்களாகிய நீங்கள் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேய்ச்சி அம்பாளின் ஆலப மகோற்சவத்திலே திரண்டு வந்திருந்து வழிபாடு செய்வதனை நோக்குகையில் இவ்வுண்மையை நீங்கள் நன்கு அறிந்திருக்கின்றீர்கள் எனப்படு தெரிகின்றது. சைவ நாயன்மாரின் குருபூசைகளை மிகச்சிறப்பாகக்கொண்டாடியதால் நாயன்மார்கட்டு எனப்பெயர்பெற்ற கிராமத்தில் உள்ளோர் சைவாசாரங்களை நன்முறையிற் கடைப்பிடிப்பதும் வியப்போ? இவ்வாறு நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேய்ச்சி அம்பாளின் மூன்றும் நாள் திருவிழாவின் போது சொற்பொழிவாற்றுகையில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார். பெருந்திரளான சைவ அடியார்கள் அன்னாரின் சொற்பொழிவைச் செவிமடுத்துப் பயன் பெற்றனர்.

— வாணி —

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமசாந்த நிலையின் பக்குவம்

அனேஜத் ஏகம் ஜவீயோ, ந ஏநத் தேவா
ஆப்நுவன் பூர்வமர்ஷத் ।
தத் தாவகோ அன்யான் அத்யேதி திஷ்டத்
தஸ்மின் அபோ மாதரிஷ்வா ததாதி ॥

பரமேஸ்வரன் ஏகமாயுள்ளவர். அசைவற்றிருப்பவர். ஆயினும் மிகுந்த வேகத்தை யுடையவர். புலனுணர்வு, மன உணர்வு ஆகிய இவைகள், சென்று அடைய முடியாத அவ்வளவு வேகத்தினையுடையவர். அவர் விகாரமற்றவர். அசைக்கின்ற காற்றுப் போல — மாதரீஸ்வரர் என நின்று, பஞ்ச பூதங்கள் முதலியவற்றை அவற்றிற்குரிய செயல்களில் இயக்கி விடுகின்ருர்.

— ஈஸாவாஸ்ய உபநிடதம்,

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ ஆடி மீ உகூ உ வெள்ளி

## நாவலரைநினைவூட்டும்நல்லதலம்

திருக்கேதீச்சரத்திற் காலை சந்திப் பூசையைக் கிரமமாக அனுபவித்த சைவ அன்பர் ஆநந்த மயமாக நின்று தாம் கண்ட காட்சி மனதிற் பிரதிபிம்பமாகும் பொழுது நாவலர் நற்றகையாரின் தோற்றம் எழுந்தது என்றும் இத்தேன்பொந்தைப் பேணிப் பயன்பெறத் தூண்டிய அப்பெரியார் ஞாபகம் இத்தலத்தில் இருப்பது விரும்பத்தக்கதென்றும் வாய்விட்டுரைத்தனர்.

இதயத்தெழுந்த எண்ணத்தை மேலும் விரித்துரைத்த அன்பர் நாவலர் பெருந்தகையாளரை ஐந்தாங் குரவர் என்று சைவ மக்கள் அபிமானத்துடன் புகழ்வதற்குக் காரணம் உண்டென்றும். நால்வரையும் மற்றைய நாயன்மாரையும் நமக்குப் பெரிய புராண வசன இனிய நடையாற் கற்பித்த வித்தகரின் சிலையோ உருவமோ திருக்கேதீச்சரத்தில் நிறுவப்படுதல் பொருத்தம் என்றும் கூறினர். பதிகம் பாடிய சம்பந்தரையும் கேதுவையும் சேக்கிழார் சுவாமிகளையும் திருமுறையையும் பதிகம் பாடிய சுந்தரரையும் நாயன்மார்களையும் சந்தானசாரியர்களையும் பூவணிந்து தீபங்காட்டும் வேளையில் அக்காட்சியின் பின நாவலர் தோற்றத்தைக் காண்பது இப்பெருங்கோயிலின் வரலாற்றை மனத்திற் பதிவுறச் செய்வதற்கு வழியாகும் என்றும் அபிமானி எடுத்துக்காட்டினர். நாவலர் சிலைப்பூசைக்குரியதாகாமல் நினைவுககமைவதாவதே அன்பரின் கருத்தாகும். மதுரையம்பதியில் அதற்குப காரியான திருமலைநாயக்க மன்னன் சிலையுண்டு இவ்வாறு வேறுபல தலங்களிலே பிரதிட்டை செய்யப் படாமல் காட்சிக்கு மட்டும் பேருபகாரிகளின் உருவங்கள் இருப்பதுண்மையே.

தேன் பொந்தைத் தேடிப் பேணுங்கள் என்று அன்று இடித்துரைத்த நாவலர் பெருமானின் அரிய வாக்குக் கைகூடிப் பூரண கோயிலாக இப் புராதன தலம் விளங்கும் வேளையில் நாவலர் எண்ணம் எம்மை விட்டகலாதல்லவா? ஈழத்திலுள்ள திருத்தலங்களில் திருக்கேதீச்சரத்தின் அமைப்பு ஆகம விதி அநுசரணைக்கு விசேட எடுத்துக் காட்டாகும். சாத்திரமும் தோத்திரமும் ஒருங்கு சமயிகளின் உள்ளத்திற் படிரிம் வண்ணம் வட பிரகாரம் வண்ணமாயமைந்திருக்கின்றது. தெய்வீகம் இப்புனருத்தாரணத்திலே நிகழ்ந்திருப்பதை காண்பிப்பவற்றுள் ஒன்று தக்ஷிணா மூர்த்தியின் அமைப்பும் அமைவும், சின்முத்திரை காட்டிப் புன் சிரிப்புக கூட்டும் சிற்ப ஓவியச் செம்மை திருவருட் பாங்கே.

எனவே பூரணமாய்ப் பொலியும் இப் புராதன கோயிலில் எங்கள் சமய குரவரின் நினைவு இதயத்தில் மட்டுமன்றி உருவத்திலும் இருப்பின் வரலாற்றுக் கமைவதாகுமல்லவா?

# நாவலர் பிள்ளைத் தமிழ்

## "பழைய பாணி"யின் புதிய விருந்து

[ பண்டிதமணியின் பெரும் பாராட்டுப் பெற்றிருக்கும் நாவலர் பிள்ளைத் தமிழ்ப் புலவர் யார்? "பழைய பாணி" என்ற அளவில் பண்டைத் திருநூல்கள் துருவியாய்ந்த பண்டிதர் ஆகவே யிருப்பார் என்று நாம் அநுமானிக்க வேண்டியதுதானே? மாவை முருகன் பிள்ளைத் தமிழ் அன்புருக, யாவரும் உள மகிழ யாத்த அறிஞரே இப்பிள்ளைத் தமிழையும் இயற்றினர் என்றால் வேறு புனைந்துரை வேண்டியதில்லை.

மானிப்பாய் இந்துக் கல்லூரி விரிவுரையாளராகப் பன்னெடுங் காலம நற்பணி யாற்றி ஓய்வெடுத்திருக்கும் வித்துவான் மு. கந்தையா ஆங்கிலக் கலைமாணிப் பட்டதாரி. ஏழாலை மடாலயச் சைவ சீலச் சூழலை இருப்பிடமாகக் கொண்டவர் என்றால் அறிமுகம் இனிதமையும். ப—ர் ]

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்த வரிசையைச் சேர்ந்தது பிள்ளைத் தமிழ்.

பிள்ளைமைப் பருவத்தைப் பத்துக் கூறு செய்து, ஒவ்வொரு பருவத்தையும் பத்துப் பத்துப் பாடல்களால் வர்ணிப்பது பிள்ளைத் தமிழ்.

நிரம்பிய கற்பனா சத்தி, விஸ்தாரமான புலமை, கவிதா சாமர்த்தியம் இத்தனையும் இயல்பானமைந்தவர்களே பிள்ளைத் தமிழ் இயற்ற வல்லுநர். இத்தனைக்கும் மேலே சைவ சித்தாந்த நுண்ணறிவும் படைத்தவரே இயற்றற்பாலது நாவலர் பிள்ளைத் தமிழ்.

முதலாவது பருவம் காப்புப் பருவம். திருமால் முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள் இறுவாயாகப் பத்து வகைத் தெய்வங்கள் பிள்ளையைப் பாதுகாத்தருளல் வேண்டுமென்று தனித் தனி பிரார்த்தித்து வேண்டுதல் செய்யும் பருவம் காப்புப் பருவம்.

X X X

18-12-1822 க்குச் சமமான சித்திரபானு ஹூ மார்கழி மீ 5 ஆந் தேதி பூர்வ பக்க இரவு, சிங்கலக்னத்தோடு கூடிய சுபவேளையில் யாழ்ப்பாணத்து நல்லூரிலே புறமத இருளை விடியச் செய்யும் நாவலர் என்கின்ற ஞான சூரியன உதயமாகுஞ் சமயத்திலே,

கைலாச பிள்ளையார் கோயில் மணி மங்கள ஒலி செய்தது, சங்குகளிலிருந்து ஓங்கார நாதம் பரவியது. விநாயகப் பெருமானுக்குத் தீபாராதனை நடந்து கொண்டிருக்கப் பிள்ளை சிரசு உதயமானது.

மணி ஒலி, சங்கொலி கேட்ட அக்கணமே விநாயக வணக்கத்தை யடுத்துப் பிள்ளையைப் பாதுகாத்தற்குக காத்தல் தெய்வமாகிய திருமால் ஆயத்தம் ஆயினர். ஒரு பெரிய ஆச்சரியம்! திருமாலுக்கு அழைப்பு வரவில்லை. திருமால் சிந்திக்கின்றார்; —

"பஞ்ச கிருத்தியங்களில் படைத்தலினும் முக்கியமானது காத்தல்; அதனை இறைவன் என்பால் வைத்தருளினர்.

பிள்ளைத் தமிழிலே விநாயக வணக்கத்தை அடுத்து முதற் பருவத்தில் முதலிடம காத்தற் றொழிலை மேற்கொண்ட எனக்கே உரித்தானது.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழிலோ, திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழிலோ, பிள்ளைத் தமிழின் சிகரமான மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலோ இந்தப பண்டு தொட்டவழக்காறறை நன்கு காணலாம்.

[illegible] என் [illegible] தமிழ்களிலும் பார்க்க அதிகம்! அதிகம்!! மிக அதிகம்!!! இங்ஙனமாகவும் என்னை அழையாத புதுமைதானென்னே!"

பாற்கடல் மத்தியில் அலைகள் மோத அசைவின்றி அறிதுயில் புரியும் திருமாலைச் சந்தேக அலைகள், அசைவு செய்கின்றன.

மேலும் திருமால் சிந்திக்கின்றார்:-

'பிரமதேவன் ஒரு சமயம் குட்டுண்டு சிறைப்பட்டான். சுப்பிரமணியரையோ வேறு எவரையுமோ யான் மதியாதிருக்கவில்லையே! என்னை அழையாமை ஆச்சரியம்! ஆச்சரியம்!!

அந்தப் பிள்ளையின் கதி யாதாமோ! நான் காத்து நிற்க வேண்டிய இடத்தில் நின்று, பிள்ளையைக் கண்ணுங் கருத்துமாய்க் காக்க வல்லுநர் வேறு யாரோ ஆண்டுச் சென்று சற்றுப் பார்த்தாலோ!" சிந்தனை வளருகின்றது.

மூவுலகையும் அளந்த திருவடிகளிலொன்று மெல்ல இடம் பெயருகின்றது! பீதாம்பரமாதி ஆடை அணிகளைச் சிறிதே ஒதுக்கிக் கொண்டு திருமால் திருக்கண் சாத்துவாராயினர்.

நாவலர் என்கின்ற அந்த ஞானப் பிள்ளையை மற்றொரு பிள்ளை பாதுகாத்து நிற்பதைத் திருமாலின் கண்கள் கண்ணிறையக் காணுகின்றன. காத்து நிற்கும் பிள்ளை சம்பந்தப்பிள்ளை - அபரசுப்பிரமணியப்பிள்ளை.

திருமாலுக்கு அச்சம் அகன்றது தாமரைக் கண்கள் ஆனந்தத் தேனருவி சொரியத் திருவாய் மலரில், பொருத்தம்! பொருத்தம! என்ற வார்த்தைகள் தவழ்ந்தன.

X X X

1. சமணிருள் கடிந்த பிள்ளை தானே புறமத இருள் கடியும பிள்ளையைக் காக்க வேண்டும்!
2. கூனிமிர்த்த பிள்ளை தானே சைவக் கூனிமிர்க்கும் பிள்ளையைக் காக்க வேண்டும்!
3. தமிழ் சைவம் வளர வளர்ந்த பிள்ளை தானே, தமிழ் சைவம் வளர்க்கும பிள்ளையைக் காக்க வேண்டும்.

X X X

"இன்று எம் சைவம் செயலடங்க
எதிரும இடையூ றொழித்தன்றி
எந்தப் பதமும யான வகியேன்
இகலில் மணவாழ்க்கையும இசையேன்
என்றன் றெழுந்த **நாவலனை**
இணையில் சைவ காவலனை,"

X

"துன்றுஞ் சைவந் தலை மடங்கச்
சூழ்ந்து முடக்குஞ் 'சமணங்து
நின்ற நிலைமை அழிவித்துச்
சைவ நெறிபா ரித்தன்றி
ஒன்றுஞ் செய்யேன்' என எழுந்திட்டு
உயர்நற் றமிழ்க்கும் உறுதியுற
ஒரு கூனென முக்கூனி மிர்த்த
உயர் **காழியர் கோன்** காத்திடுக."

X

என்கின்றது நாவலர் பிள்ளைத்தமிழ்.

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பிள்ளைத் தமிழ்

( 2 ஆம் பக்கத்து வளர்ச்சி )

'காழியர் கோன் காத்திடுக'

என்று உரிமைப்பாடுகளை அடுக்கிக் காட்டி வேண்டுதல் செய்கின்றது நாவலர் பிள்ளைத் தமிழ்.

இதனைக் கேட்டுத் திருமாலின் செவிகள் குளிர்கின்றன.

'பர சமயிகளாலோ, சுவ சமயிகளாலோ இடையூறு அணுகாமல் இப்பிள்ளையை வேண்டுஞ் சந்தர்ப்பங்களில் பாது காத்து வைப்பது என் கடன்' என்று திட சங்கற்பஞ் செய்து கொண்டு வாழ்த்துகின்றார் திருமால்.

இவ்வாறே திருமாலை அடுத்து வரும் ஒன்பது வகைத் தெய்வங்களினிடத்துக்கும் ஏற்ற ஒன்பதின்மரைத் திருஞான சம்பந்தரை அடுத்துப் பொருத்தமுற நிறுத்தி வேண்டுதல் செய்கின்றது நாவலர் பிள்ளைத் தமிழ்.

ஏனைய ஒன்பதின்மராவார் திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், சந்தாசாரியர் நால்வர், சேக்கிழார், கச்சியப்ப சிவாசாரியர் என்போராவர்.

X X X

முப்பத்து முக்கோடி தேவர்களினிடத்தில், தேவரைக் காத்த சுப்பிரமணிய சுவாமி மீது கந்தபுராணம் பதினாயிரம் பாடிய கச்சியப்ப சிவாசாரியரைப் பொருத்தமுற நிறுத்திய புதுமையை என்ன என்பது !

X X X

நல்லூரில் ஒரு ஆறுமுகப்பிள்ளையை முதலில் அபர சுப்பிரமணியப் பிள்ளையும் இறுவாயில் பரசுப்பிரமணியப்பிள்ளையின் அடித்தொண்டும் காக்க வைத்த பொருத்தத்தின் பொருந்துமாறுதான் என்னே !

X X X

இவ்வாற்றால்,

"பழைய பாணி" யின்

புதிய பாணி

இருந்தவாறு !

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# மீசாலை மேவும் விநாயகர்

1ம் பக்கத்து வளர்ச்சி

றுக்கிழமை சிறப்பாக நிகழ்ந்த தீர்த்தவிழா திங்களன்று முறையாக நிறைவுற்றது.

வெள்ளை மாவடித் திருநீல கண்ட பிள்ளையார் கோவிலுக்குச் சரித்திரத் தொடர்பு உண்டு. வெள்ளை மாஞ் சோலையில் கண்ட விக்கிரகம் அதை அப்பால் மாற்றி வைக்க முடியாதபடி முன்னொருகாலம் ஒரு அடியார் கண்ணில் காணப்பட்டது அதனை எடுத்துச் செல்லவும் முற்பட்டும் முடியாமல் போய்விட்டது. எனவே அம் மரத்தைப் பிரதிஷ்டை செய்தனர்.

இக்கோயில்தான் இன்று தென்மராட்சிப் பிரிவில் மீசாலையில் பிரபலம் பெற்ற விக்னேஸ்வரர் ஆலயமான திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோவிலாக உருவம் பெற்றுள்ளது.

"பார் மிக்க, செய்யம்,
பரவுவோரீடேற
சீர் பெற்ற மீசாலை சேர்
வெள்ளை மாவடியிற்
பேர் பெற்ற மூர்த்தி தலம்
தீர்த்தம் இம் மூன்றும்
சீர் பெற்று இருப்பவனைச்
செப்பு"

"மார்மிக்க, நேயப்,
பரவுவோரீடேற
சீர் பெற்ற மீசாலை சேர்
வெள்ளை மாவடியிற்
பெர் பெற்ற மூர்த்தி தலம்
தீர்த்தம் மூன்றும்
சீர்பெற்று இருப்பவனைச்
செப்பு"

இக்கோயிலுக்கு திருநீல கண்டம் என்ற அடைமொழி ஏற்படுவதற்குக் காரணமாகவுள்ள மற்றொன்றாகும் முன்பு கோயில் முகாமையாளர் முடிக்குரிய மரங்கள் சிலவற்றைத் தறித்து வந்தனர் இம்மரங்களை உத்தரவின்றித் தறிக்கப்பட்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டிக் கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு முதல் நாள் குறிப்பிட்ட விசாரணையாளரின் மனைவிக்குக் கண்டத்தில் நோய் காணப்பட்டது. திடீரென இவ்வியாதி ஏற்பட்டதை விசாரித்தபோது ஒருவர் பிள்ளையார் கோவில் முகாமையாளர் கைது செய்யப்பட்டதைக் கூறினார். மேலும் அக்கோயிலுக்கு நேர்த்தி வைத்து முகாமையாளரையும் விடுதலை செய்தார். உண்மையில் அந்த நோய் மாறியது இப்பெரியார் கோயிலுக்கு சில பொருட்களை உபயஞ்செய்தார் அவர் உபயஞ் செய்த படுக்குடை ஆலவட்டம் என்பன இன்றும் கோவிலிலுள்ளன. ஒரு சமயம் இப்பிள்ளையார் கோவிலில் ஒரு திருடன் உள்ளே நுழைந்து சில கோவிற் பொருட்களைத் திருடிக்கொண்டு வெளியேறிவிட்டான். அப்பனின் புதுமை திருடன் குருடனானான் அவன் தடவித் தடவி வெளியேறித் தல விருட்சத்தில் ஏறிக்கொண்டான்.

பிள்ளையார் கோவில் முகாமையாளரின் கனவிலே தோன்றி கோவிலில் திருட்டு நடந்ததையும் திருடன் தல விருட்சத்தில் இருப்பதையும் தெரிவித்து விட்டார் இரவிரவாக முகாமையாளர் உதவியாளர்களுடன் அவ்விடத்துக்குவந்து திருடனையும் பொருட்களையும் கண்டார்.

இந்தத் தென்மராட்சிப் பிரிவில் மீசாலைக் கிராம மத்தியில் உண்மைபோல ஓங்கிய சிறப்புடன் தேரும், திருக்கோயிலும், தல மடமும் பொலிய விளங்குவது திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்.

கந்தபுராண படனமோ, தேவாரப் பண்ணிசையோ விடாது ஒலித்துக்கொண்டிருக்கும் இந்த ஊர் மக்களின் அசையாத பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது

பல்லாண்டு காலம் படித்துப் பாதுகாக்கப்பட்டுவரும "கந்தபுராணப் பழைய பனம் ஓலை ஏட்டுப் பிரதிகளும்,' பேணப்பட்டு வந்துள்ளன.

## புற்றெடுத்ததொன்று புகுந்தது வேறொன்று

"இறை-ஒளி"

கங்கைக் கரையோரம் கந்தன் கருணைநதி
பொங்கிப் புரளும் பொழுதினில் — அங்கருள்
ஆரமுதை அள்ளி அருந்துவதற் கன்பர்கள்
சீரணியாய்ச் சேர்கின்றார் ஆல்.

தங்குமடம் வேண்டுமென்றே தக்கதாய் அமைந்ததுமோ
அங்கில்லை இப்பொழுதார்கேட்க — இங்கிதமாய்ப்
புற்றெடுக்க ஒன்று புகுந்தது வேறொன்றும்
சற்றருள்வாய் சண்முகத்தந் தாய்.

## பஞ்சாப்பிற் பெரு வெள்ளம் ! தண்ணீர்ப் பஞ்சம் இங்கு

'மொட்டை அல்லது-குடுமி' என்று இயற்கையும் விபரீதங் காட்டுகிறது. பஞ்சாபிலே பெரு வெள்ளம் தொடர்ந்து ஊற்றுக் கணக்காணோர் காலத்தில் இங்கு நமதுநிலை தண்ணீர்ப் பஞ்சம் வெள்ளம்போலப் பரவுகின்றது.

கலிகாலமே ! இது உன் கோலமா ?

## பெரியபுராணம் தொடர் விரிவுரை

அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய மகோற்சவம் ஆடி மாதம் 16-ஆம் தேதி சனிக்கிழமை ஆரம்பமானது இக்கோவில் திருவிழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெரியபுராணம்பற்றி தொடர் விரிவுரை தினமும் நிகழ்த்தினர். இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் விரிவுரையைத் தொடக்கி வைத்தனர்.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ. இல 13105

அருணாசலம் சின்னத்தம்பி, காங்கேசன்துறை ரேட்டு வல்வெட்டித்துறை — வாதி

எதிராக

1. பளனியாண்டி முத்துலிங்கசாமியும் 2. பெண் மீனம்பிகை பருத்தித்துறை ரேட்டு, வலவெட்டிததுறை — பிரதிவாதிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் குறித்த கோட்டால் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1976-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22-ம் திகதி (22-9-76) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் பெறுமதி — ரூபா 79513,88

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமாராட்சிப் பகுதி உடிப்பிட்டி கோயிற்பற்று, வல்வெட்டித்துறையிலிருக்கும் "ஆனை விழுந்தான்" நி, பர. 25 ஷ வீடு ¾ ஷ நிர 3 5/8 ஷ நிர.7 1/4 இவைகளில் தெற்குப் பக்கத்தில நடுபபுறமாக தெற்கே நிர 3 5/8 இதில் கிழக்குப்புறமாக நிர 2 இதில உலாந்தா மேஸ்தர் கே. வேல் முருகு அளவையாளரால் 10-2-1976) தில் 3497 இலக்கப்படத்தில் 1-ம் துண்டுக்கு நிர 1, குளி 3¼ எல்லை கிழக்கு குமாரசாமி பால சுப்பிரமணியமும் மறுபேருடைய ஆதனமும், வடக்கு ஒழுங்கையும் சிவஞானசுந்தரம் கைம்பெண் சந்திரமதியின் ஆதனம், மேற்கு செல்வசபாபதி பெண் சொர்ண இலச்சுமியின் ஆதனம் தெற்கு ரேட்டு இவவெல்லைக் குட்பட்ட நிலம், கல்வீடும் அடுக்களை, கிணறு, மண்டபம மற்றுமடங்கலும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்தவாதிக்கு ரூபா 9570/-வும் மேலும ரூபா 6000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு புரட்டாதிமாதம 1-ம திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5, வீத வட்டியும, வழக்குச் செலவும கொடுக்கவேண்டியிருக்கிறது.

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி,
9-8-76

39 13-8

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ.இல. 12163

1. இராசையா செல்லத்துரையும் 2. பெண் வேலம்பிகை இருவரும காரைநகர் வடக்கு காரைநகர் — வழக்காளிகள்

எதிராக

1. யாழ்ப்பாணம் நல்லூர் பருத்தித்துறை வீதி ஆனைக்குட்டி ஒழுங்கை சின்னத்தம்பி சிவக்கொழுந்து 2. யாழ்ப்பாணம் நல்லூர் நாகலிங்கம் கோபாலசிங்கம் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB./12163 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1976ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி (31-8-76) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 2800.00ம் 24-11-70 தொடக்கம் 19-6-71 வரைக்கும் ரூபாய் 2000 00 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும இறுக்குந்தவரை 5 வீத வட்டியும் கோட்டுச் ரூபா 303.90 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை பெரியபனம தோட்டம சுடுகாடு புலமும் புதுவழவு நில. இலா. 4. குளி 3. 3/8 இன்னும் ஷ யிறை பர. நில. இலா. 4 குளி 8-7/10, இருதுண்டுகளும் ஒன்றுய்கூடி பர நில. இலா. 8. குளி 12-3/40, ஆனால உத்தரவு பெற்ற உலந்தா J.D. வீரசிங்கமவர்களின் 18-12-60 தேதி உடைய இல 2711 கொண்ட உலாந்தா படத்தின் படி பர. நில. இலா. 8 குளி 16¾ இதடங்களில் ஷ படத்தில் முதலாம துண்டாக காட்டப்பட்ட காணிக்குகிழக்கால் பிரிவிடப்பட்ட பர. நில. இலா-3 பயாவகைகளுடன தெறகெல்லை காணியில மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில்பங்கும் துலா ஆடுகால் தூர்வை முதலாம துண்டாகக் காட்டப்பட்ட மிகுதி காணியின் தெறகெல்லையோரமாகவும. ஷ படத்தில் இரண்டாம் துண்டாக காட்டிய எஞ்சிய காணியில மேற்கெல்லையோரமாக பருத்தித்துறை ரேட்டுக்கு கையொழுங்கையால் செல்வதற்கு ஊர்த்தும இப, பர. நில இலா. 3 கதும எல்லைகள் கிழக்கும் வடக்கும வியாகேசு பெண் அம்மணிபபிள்ளையினுதனம மேற்கு வேலு சின்னத்தம்பியினுதனம. தெற்கு கிட்டினு பெண் பகீரதயத்தினுதனம பதவு. இல. 338/42.

அ. போ. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14 டேவிட்றேட்
யாழ்ப்பாணம், 5-6-76,

40 13-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமரைக்
குண்டாலம் காய்த்துக் குதிரை பழுத்தது,
உண்டனர் உண்டார், உணர்விலா மூடர்கள்
பிண்டத்துட் பண்டுப் பிணங்குகின் றாரே,

From the ball-like banyan seed sprouts (and grows) a huge banyan tree, which produces crop that fructify like mango fruit. Those who eat the fruit, they enjoy (its delicious taste). Ignorant fools get born in bodies and quarrel.

Hindu Organ

FRIDAY, AUGUST 13, 1976

## Culture of Rights - Charter

SRI LANKA enters into a new chapter of historic greatness with the commencement of the Conference of non-aligned countries. August has a longstanding reputation as the month of festivals, peraheras and religious observances. Of old it used to be the period of racing and gambling. But now that the questionable 'bookings' have been abolished, this month named after Augustus Caesar has reason to be remembered for activities that tend to stimulate the civic stature of the country. Hence the relevance of the Summit Conference. To sum it up, the grand assembly of nearly fifty per centum of the States of the world is pledged to harness all resources of wisdom and thought with a view to chalking out a future for the Third World enabling it to be clear of both Scylla and Charybdis. Every country that takes pride in being non-aligned has to strive hard to achieve the distinction of being able to build up the new world where in the prospect will be pleasing.

This is the goal towards which the Non-aligned nations are determined to march in the hope of reaching it. However, it will not be an easy task. Every country participating in this great enterprise must be sure of its purpose and intention to ensure its people's realisation of the ideal for which it is campaigning. In other words non-aligned countries must be above board in the matter of exercise by their citizens of all fundamental rights. It should not be said of any member of the Third World—'physician heal thyself' — In effect a declaration of rights must be incorporated as a charter of the non-aligned nations. It should not be merely a pious or pontifical statement but must be a practicable declaration. Such a step would ennoble the efforts of this mighty summit of middle - of - the - road view points.

## National Lottery Sweep Draw

**(Sweeping Suggestions)**

Why and the wherefore of the failure of the Northern and the Eastern Provinces to annex prizes in the Draws of the National Lottery Sweep cannot be determined. It is simply inexplicable.

Take for instance Sweep No. 572 drawn on 24-6-1976. The first three prizes went to Kandana (W. P. Kandy (C. P.) and Ratnapura (Sab. P.). But what about the consolation prizes — one hundred in number? Every province excluding the E. P. and the N. P. has drawn consolation prizes. Uva drew only one and the N. C. P. two while the lion's share of the luck went to W. P. followed by Sabragamuwa C. P., S. P. and N. W. P.

Of course the buyers of tickets in the E P. and the N. P. may be comparatively less in percentage. But in the mix up of tickets run away chances are always likely. Unless the scheme of mixing up the numbers is known, one cannot say why the 'minority' numbers do not get caught in luck's limb!

## THE JAFFNA ARCHAELOGICAL SOCIETY

**(Lecture by Dr. Michel Marliere)**

In this general and short survey of archelogical remains in South East Asia, I shall confine to the sites which I visited either during my four-yeas stay in Bangkok as a lecturer or during my various journeys to those places in the last seven years. Therefore Burma and the Philippines will not be included. On the other hand I shall try and lay special emphasis on the Ceylonese Buddhist influence and on the South Indian and more especially Tamil influence in ancient and medieval South East Asia and in contemporary South East Asia as well. Geographically, I shall proceed from the most distant to the closest.

**Vietnam**

The two sites and the numerous inscriptions related to the Hindu culture in present day Vietnam did not in any way follow the vehicle of the national culture of the Vietnamese people. They derive straight from the Hindu religious traditions as adopted by the Cham, former inhabitants of South and central Vietnam.

As Paul Mus wrote in "Cultes indiens et indigenes au Champa" (BEFEO m, Vol XXVIIIm, pp. 367-410, "Of the 128 most important inscriptions of Champa, 21 are not addressed to any particular deity, 3 refer to Vishnu, 5 to Brahma while no less invoke Siva Moreover we know that it was the cult of Siva in the form of the royal linga that was the Cham national religion. First referred to as Bhadresvara in the 4th century Mison inscriptions, we know from later ones that this God was represented by a Linnga. This is the oldest known appearance of the royal linnga cult in Greater India."

At Nha trang, only a tower is left, situated on a hill overlooking the sea. The statue of a deity was removed from it about 20 years ago. This statue was still worshipped by the local population, Cham and Vietnamese alike.

This distinguished audience will have noticed that the cult of Lord Siva was already predominant in Champa as it is in present-day Jaffna and in South India. On the other hand, the cult of Lord Brahma was obviously not extinct yet.

(To be continued)

## DEATH BEFORE DEATH

V. SUBRAMANIAM
Saiva-Pulavar

(Continued from last issue of 23-7-76)

Let us pause to survey the spiritual heights already scaled by the aspirant. Unlike the worldly minded who are caught in the storm of selfishness tossed hither and thither on the waves of Envy, Pride and Avarice, and dashed on the rock of Importance Disappointment and Sorrow our hero rests comfortably in the helm of Self-less Love, rocks in the Swing of Kindness, Humility and Beneficence, and fortifies with the barricades of patience, contentment and happiness. Instead of the oppression of the mind and the narrowness of thought caused by dark motives of selfishness, our hero experiences delightful freedom and lightness through expansive love. In the place of the unbearable writhing under the burden of his own thoughts, our hero swings heatrily in the thought of the Lord. While the worldly - minded acquire wealth by addition to their possessions piling gold upon gold, diamond upon diamond, and yet are unhappy, our hero gains his wealth by a process of subtraction, throwing over-board gold and diamond, father and mother, kith and kin, thought by thought until the thought of the Lord dominates and he is perfectly happy. That destructive and baneful habit in the ordinary man of clothing others with his own thought, of picking holes in others coats and of trying to remove the mote in others' eyes, is replaced by a cruel judgment on himself on his own acts and on his own thought, while again, the worldly-minded go seeking for help, every help comes to our hero in time, and he knows it must come, as the Law of Righteousness is unerring. Peace of mind is his possession and love, his gift; his look charms the world: his internal peace throws out a lustre of sublimity. He cannot be harmed by any one; he is envy-proof, - malice-proof. His atmosphere being hallowed by the waves of the spirit, no sorrows of evil thoughts directed against him can find their way to him; they come and fall down blunted; unable to withstand the resistance of waves; they fall down as the arrows of Viswamittra fell down before Vasista.

The only way for the purification of the mind is to witness its work every moment. Ask "what is my mind doing now?" If you find it engaged in building a castle, pull it down and bring it back to its corner.

If you find it shooting arrows of malice or envy, curb it as it digs your own grave. By persistent application of this method alone, can the mind be conquered. St. Thayumanavar addresses his mind thus:

வாராய் நெஞ்சே, யுன்றன் துன்
மார்க்கம் யாவையும் வைத்
துக்கட்டிங்
காராயடிக்கடி சுற்றுகின்றாய்
உள்ளவலமந்திக்
கோராயிரம் புத்தி சொன்னாலு
மோர்கிலை போ கெடுவாய்
பாராய் உனைக் கொல்லுவேன்
வெல்லுவேன் அருட்பாங்கு
கொண்டே.

(- பாயப்புலி 50)

(To be continued)

## Sale of Unredeemed Pawned Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1 8 - 1975 with Mr. V M. Kubarasah of 124 Station Road Chunnakam on Saturday 28 - 8 - 1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

S. Mahadevan,
Auctioneer

553, K. K. S. Road,
Jaffna.

(5 6 & 13)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarpoonai, Jaffna on Friday August 13, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org